ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம், சென்னை–6

# மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள்
# விரிவுரையாளர்கள் நியமனம்
# தெரிவுப் பட்டியல் (Selection List)

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களில் காலியாக இருந்த விரிவுரையாளர்கள் பணியிடங்களை நிரப்ப அரசாணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் பணி நாடுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, போட்டித் தேர்வு நடத்தி, தெரிவு செய்யப்பட்ட 139 பேர் கொண்ட பட்டியலினை ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்திற்கு அனுப்பியுள்ளது. இவர்கள் இனவாரி சுழற்சி மற்றும் தர அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். சான்றிதழ் சரிபார்ப்பின்போது தேவையான சான்றிதழ்களை சமர்ப்பிக்கத் தவறிய 7 பணி நாடுநர்களின் முடிவுகள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

விரிவுரையாளர் பணியிடங்களுக்கு பாடவாரியாக தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை விவரம்:

| வ.எண். | பாடம் | தெரிவு செய்யப்பட்டுள்ள விரிவுரையாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தமிழ் | 22 |
| 2. | ஆங்கிலம் | 22 |
| 3. | கணிதம் | 20 |
| 4. | இயற்பியல் | 14 |
| 5. | வேதியியல் | 16 |
| 6. | தாவரவியல் | 6 |
| 7. | விலங்கியல் | 14 |
| 8. | வரலாறு | 17 |
| 9. | புவியியல் | 8 |
| மொத்தம் | | 139 |

* உடற்கல்வி இயக்குநர்களுக்கான தெரிவுப் பட்டியல் பின்னர் வெளியிடப்படும்.

தெரிவு செய்யப்பட்டுள்ள 139 பேரில் 7 பேரின் தெரிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் மீதமுள்ள 132 பேருக்கான **கலந்தாய்வு 04.01.2010 அன்று காலை 09.00 மணிக்கு சென்னை–5, திருவல்லிக்கேணி, NKT ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற உள்ளது.** கலந்தாய்வுக்குப்பின் விரிவுரையாளர்களுக்கான பணிமனை அதே நிறுவன வளாகத்தில் நடைபெறும். 05.01.2010 அன்று நியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளன.